3. தகவல்கோரல்.

(அ) அதிகாரிகள் மட்டத்தில் உள்ளவர் குறித்து.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. ராமபத்திரன் அதிகாரிகள் வரிசையில் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர்கள் அந்தஸ்தை பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆபீஸர் காலரி பற்றிய பிரச்னை குறித்து இந்த அவையில் எழுப்பக் கூடாது. அது ஒரு மரபாக இருக்கிறது. இது ஒரு அவசர பிரச்னையும் அல்ல, உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தங்கள் அனுமதி யோடு (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடிக்கடி இப்படி எழுந்திருக்க வேண்டாம். ஆபீஸர்ஸ் காலரி பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நியாயமும் இல்லை.

(முற்பகல் 10.10)

(ஆ) காமராஜ் சிலை விலக்கு இல்லாமல் இருப்பது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தங்கள் அனுமதி யோடு ஒன்றைக் கூற விரும்புகிறேன். திரு. துரைமுத்துசாமி அவர்கள் எடுத்துக் கூறியது, அதாவது எல்லோரும், அனைத்து அரசியல் கட்சிகளும் மதிக்கின்ற மரியாதை காட்டுகின்ற பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது இதைத்தான் நான் சொன்னேன். இராஜராஜ சோழன் சிலை பற்றிய கேள்வி வரும்போது, அதையொட்டிய கேள்வியை கேட்க வேண்டுமே தவிர, காமராஜ் அவர்களுடைய சிலையைப் பற்றிய கேள்வியை அனுமதித்தால், அதுபோன்று இன்னும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சிலையைப் பற்றி, பின்னால் கலைஞர் அவர்களுடைய சிலையைப்பற்றி, பெரியார் அவர்களுடைய சிலையைப்பற்றி எல்லாம் கேள்விகள் வரும். அதனால்தான் காமராஜ் அவர்களின் சிலைபற்றிய கேள்வியையும் அனுமதிக்க வில்லையே தவிர வேறு எதுவும் இல்லை.

திரு. ஜே ஜேம்ஸ் கேள்வியை ஏன் அனுமதிக்கவில்லை என்பதைப்பற்றி நான் கேட்கவில்லை. அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒரு பிரச்னையை கொண்டு வருவதற்காக இதைச் சொல்ல